மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
காட்டுமன்னார்கோயில்

**முன்னிலை : திரு.M. சாம் யூஜின் ஜெபக்குமார், B.E.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ,
காட்டுமன்னார்கோயில்

2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை

E.P.20/2022
in
O.S.46/2001

அஞ்சலையம்மாள் ...... மனுதாரர்/வாதி

–எதிர்–

1. கெங்காசலம் **(இறந்தார்)**
2. சரோஜா
3. அறிவழகன்
4. ஸ்டாலின்
5. ஜானகிராமன்
6. அதேநிலா
7. சிங்காரம்மாள் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 29.04.2025 அன்று என் முன்னர் முடிவான விசாரணைக்காக வந்தபோது மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.M.மாரியப்பன் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4, 6ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும், எடுத்துரைப்பு செய்யாததாலும் 22.04.2024 தேதியன்று தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 5, 7 எதிர்மனுதாரர்கள் 13.10.2023 அன்று

தோன்றாதரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ......

## உத்தரவு

1. இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 21 விதி 35-ன் கீழ் தீர்ப்பின் படி மனு சொத்து சுவாதீனம் மனுதாரருக்கு கொடுக்கும் படி எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுத்தும், அவ்வாறு எதிர்மனுதாரர்கள் மனுசொத்து சுவாதீனம் மனுதாரருக்கு கொடுக்க தவறும் பட்சத்தில் நீதிமன்ற கட்டளை மூலம் சொத்து சுவாதீனம் மனுதாரருக்கு கிடைக்கும் படி உத்தரவு செய்யவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் :

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, அதில் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்கு கோப்புகளை ஆராய்ந்தும் இந்நீதிமன்றத்தால் அனுமதித்து வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலும், அத்தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொருட்டு இம்மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் 2 முதல் 4, 6 எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிக்கு

இந்நீதிமன்றத்தின் மூலம் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 22.04.2024 தேதியன்றும் 5, 7 எதிர்மனுதாரர்கள் 13.10.2023 அன்றும் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

4. தீர்வுக்குரிய பிரச்சினை மனு அனுமதிக்கப்படக்கூடியதா?

5. மனுதாரர் வாதம் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் இந்த நிறைவேற்று மனு அசல் வழக்கில் 14.08.2003ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொருட்டு தீர்ப்பாணை பெற்றவரால் கட்டளை 21 விதி 35-ன் கீழ் உரிமையியல் விசாரணைமுறை சட்டத்தின் கீழ் மனுவில் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை திருப்பி ஒப்படைவு பெறும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிறைவேற்று மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை.

6. அசல் வழக்கானது 14.08.2003ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அந்த தீர்ப்பாணை 09.09.2019 தேதியிட்ட மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின்படி உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிறைவேற்றுகை மனுவானது 28.03.2022ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்த நிறைவேற்றுகை மனு உரிய காலத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண்.46/2001 ல் ஏற்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக சிதம்பரம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அது

அனுமதிக்கப்பட்ட நிலையில், முதல் மேல்முறையீட்டில் எற்பட்ட தீர்ப்பை எதிர்த்து இந்த நிறைவேற்றுகை மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் SA.292/2019 வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் 09.09.2019 தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் படி இந்நீதிமன்றத்தின் 14.08.2003 தேதியிட்ட தீர்ப்பாணை மீட்டமைக்கப்பட்டது. மேலும் இரண்டாம் மேல்முறையீட்டில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து வேறு எந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதாகவோ, அந்த தீர்ப்பாணை மீது தடையுத்தரவு நிலுவையில் இருப்பதாகவோ, எதிர்மனுதாரர்கள் எதுவும் எடுத்துரைக்கவும் இல்லை நிரூபிக்கவும் இல்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல் செய்யாத நிலையிலும், அசல் வழக்கானது 2001 வருடத்திற்குரியது என்றும், அசல் வழக்கின் தீர்ப்பானது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் இரண்டாவது மேல்முறையீட்டில் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையிலும், அந்த அசல் வழக்கில் தீர்ப்பின் பலனை தீர்ப்பாணை பெற்றவர் அடையும் பொருட்டு இம்மனுவை அனுமதிப்பதே சரியான தீர்வாகும் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனு சொத்தை 18.07.2025 தேதிக்குள் மனுதாரர் வசம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. மூன்று நாட்களுக்குள் படி செலுத்த வேண்டும். அழைக்க 21.07.2025

இந்த உத்தரவு என்னால் சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு

2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 10 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(ஒம். M. சாம் யூஜின் ஜெபக்குமார்)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காட்டுமன்னார்கோயில்.